செ.வெ.எண்:173 நாள்-17.03.2021

# 100 சதவீதம் வாக்களிப்பது குறித்து புதிய பேருந்து நிலையத்தில் வாகனங்களுக்கு விழிப்புணர்வு ஓட்டுவில்லை ஒட்டி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம. கோவிந்தராவ் இ.ஆ.ப., அவர்கள் விழிப்புணர்வு ஏற்ப்படுத்தினார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் இந்திய தேர்தல் ஆணையம் வரும் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 முன்னிட்டு தேர்தலில் 100 சதவீதம் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டுமென வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி, 100 சதவீதம் வாக்களிப்பது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுத்தும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் புதிய பேருந்து நிலையத்தில் பேருந்து, கார், ஆட்டோக்களில், தேர்தல் சம்மந்தமான விழிப்புணர்வு ஓட்டுவில்லையை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம. கோவிந்தராவ் இ.ஆ.ப., அவர்களால் இன்று (17.03.2021) ஒட்டப்பட்டது.

தொடர்ந்து புதிய பேருந்து நிலையத்தில் பேருந்தில் பயணம் செய்த பயணிகள், பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளிடமும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிப்போம், நமது வாக்கு நமது உரிமை, எனது வாக்கு விற்பனைக்கு அல்ல, தவறாமல் வாக்களிப்போம், அச்சமின்றியும், எந்தவொரு தூண்டுலுக்கும் உட்படாமலும் நேர்மையாக சிந்தித்து வாக்களிக்கவேண்டும் என தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்ப்படுத்தினார்.

முன்னதாக 100 சதவீதம் வாக்களிப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்ப்படுத்திய போது அனைவரும் முககவசம் அணியவும், கைகைளை அடிக்கடி கழுவவும், சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும் என பொதுமக்களிடம் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம. கோவிந்தராவ் இ.ஆ.ப., அவர்கள் அறிவுறித்தினார்.

தொடர்ந்து தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் திருமதி. ஜானகி ரவிந்திரன், திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) திரு கதிரேசன் தஞ்சாவூர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு. அன்பழகன், கும்பகோணம் பகுதி வட்டார போக்குவரத்து அலுவலர் திரு. ஜெய்சங்கர், வட்டார போக்குவரத்து ஆய்வாளர் திரு. விஜயகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்படுத்தப்பட்டது.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர். தஞ்சாவூர்.**